செய்தி வெளியீடு எண்: 078 நாள் : 04.02.2016

## செய்தி அறிவிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைக்கேற்ப விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியிறுல் இயங்கி வந்த எஸ்.வி.எஸ். யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் பயின்று வரும் மாணாக்கர்களை சென்னையில் அமைந்துள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிக்கு உடனடியாக மாற்றம் செய்ய வேண்டி உள்ளது. இந்த சிறப்பு மாற்று கலந்தாய்வில் கலந்து கொள்ள தகுதியுடைய மாணாக்கர்கள் முறையே :

1. எஸ்.வி.எஸ். யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் 2008–09 முதல் 2014–15 கல்வி ஆண்டுகளில் இணைந்து அவர்களது பெயர்கள் தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர்.மருத்துவ பல்கலைகழகத்தில் பதிவு செய்யப்பட்டு படித்துக் கொண்டிருப்பவர்கள் .

2. 2015–16 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர்.மருத்துவ பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட இருக்கை விவரத்தின் அடிப்படையில் இவ்வாணையரக தேர்வுக்குழுவால் வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டு ஆணையின்படி மேற்கூறிய கல்லூரியில் இணைந்து, யோகா மற்றும் இயற்கை மருத்தும் பட்டப்படிப்பு பயின்று வரும் மாணாக்கர்கள்.

மேற்கண்ட சிறப்பு கலந்தாய்விற்கு வரும் பொழுது கீழ்க்கண்ட சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்றினை சென்னை, அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனை வளாகத்தில் உள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் 10.02.2016 அன்று காலை 10.00 மணி அளவில் நடைபெறவிருக்கும் சிறப்பு மாற்று கலந்தாய்வில் கலந்து கொள்ள கோரப்படுகிறார்கள்.

1. கல்லூரி நிர்வாகத்தால் வழங்கப்பட்ட ஆளறி சான்றிதழ் (Identify Card)/ மற்ற ஏனைய ஆவணங்கள்.
2. மாணவரின் பெயர் மற்றும் புகைப்படம் இடம்பெற்ற ஏதேனும் ஒரு அசல் ஆளறி சான்றிதழ்.
3. பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட ஏதேனும் தேர்வுக்கான நுழைவுச் சான்றிதழ்.
4. எஸ்.வி.எஸ். யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியால் வழங்கப்பட்ட கல்வி கட்டண இரசீது.

மேலும் விவரங்களுக்கு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை தேர்வுக்குழு அலுவலகத்தை 044–26216244 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை
கூடுதல் தலைமை செயலர் / ஆணையருக்காக

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**